# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8073087

C

1. District : மாவட்டம் சேலம். | PS: காவல்நிலையம் ஊதகபிரிவு. | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 16/AC/2018 | Date: நாள் 28/8/2018.

2. (i) Act சட்டம்: Sec : 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: -
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 10.8.2018 – 1100hrs 2) 24.8.2018 – மதியம் சுமார் 3 மணி. } சேலம் வீட்டு வசதி செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அலுவலகம். அய்யந்திருமாளிகை சேலம்.
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.8.2018 | Time நேரம் : 1400hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.8.2018 | Time நேரம் : 1400hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 5 கி.மீ கிழக்கே.
   Beat Number : முறைக் காவல் எண் - | (b) Address : முகவரி சேலம் வீட்டு வசதி செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அலுவலகம். அய்யந்திருமாளிகை சேலம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. துரைசாமி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. ராமகவுண்டர்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 67/2018 | (d) Nationality : நாட்டினம் இந்தியா | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - | Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் மின்சார வாரிய உதவி கணக்கு அலுவலர் (ஓய்வு) | (g) Address : முகவரி க.எண் : 586, நாராயண பிள்ளை தெரு, அழகாபுரம். சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. தனசேகரன். உதவியாளர். சேலம் வீட்டு வசதி செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அலுவலகம். அய்யந்திருமாளிகை. சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) –

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது .

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..C.R. [illegible].. பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
28.8.18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.8.2018 – 08.30hrs.

Name: பெயர் C.R. [illegible].
Rank: நிலை காவல் ஆய்வாளர். No. எண் ..........
[illegible]. சேலம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சமர்ப்பிக்கப்படுகிறது

27.08.2018-ம் தேதி 14.00 மணிக்கு R.துரைசாமி, த/பெ ராக்கமுத்து, க.எண்.585, நாராயணபிள்ளைத்தெரு, பெரமனூர், சேலம்.7. என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு,

அனுப்புதல் R.துரைசாமி, த/பெ ராக்கமுத்து, க.எண்.585, நாராயணபிள்ளைத்தெரு, பெரமனூர், சேலம்.7. பெறுதல் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சொர்ணபுரி, சேலம்.7. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஈரோடு மண்டலத்தில் உள்ள தணிக்கை பிரிவில் உட்தணிக்கை அலுவலராக பணிபுரிந்து கடந்த 31.05.2010ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 1995ம் வருடம் நான் பணியில் இருந்தபோது சேலம் அன்னதானப்பட்டியில் தமிழ்நாடு அரசின் சேலம் வீட்டு வசதி பிரிவின் மூலம் எண்.58 கொண்ட நடுத்தர வருமான வகை வீடு(MIG) ஒன்று எனக்கு ஒதுக்கப்பட்டது. அப்போதைய அந்த வீட்டின் மதிப்பு ரூபாய்.1,29,725/- ஆகும். மேற்படி தொகையை நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வீட்டு கடனாக பெற்று செலுத்தினேன். பிறகு, மேற்படி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஏற்படுத்த கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர் மேற்படி நிலத்திற்காக தனக்கு வழங்கப்பட்ட தொகை குறைவு என்றும் அதனால் கூடுதல் தொகை வழங்கக்கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கில் நில உரிமையாளருக்கு கூடுதல் தொகை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் அதனால் ஒவ்வொரு பயனாளிக்கும் கூடுதல் தொகை செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. ஆனால், மேற்படி கூடுதல் தொகையை என்னால் குறிப்பிட்ட காலத்தில் செலுத்த இயலவில்லை. இது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணையில் மேற்படி கூடுதல் தொகை மற்றும் வட்டியுடன் நிலுவைத்தொகையும் செலுத்த சிறப்பு அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. அதனால் மேற்படி கூடுதல் தொகை வட்டியுடன் சேர்த்து செலுத்துவது சம்மந்தமாக கடந்த 19.6.2018ம் தேதி சேலம் அய்யந்திருமாளிகையில் உள்ள சேலம் வீட்டு வசதி பிரிவு செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்று அங்கு உதவியாளராக பணிபுரியும் திரு.தனசேகரன் என்பவரை சந்தித்து எனது வீட்டு கடன் நிலுவைத்தொகையை செலுத்துவது குறித்து கேட்டேன். அதற்கு அவர் தன்னை

வேறொருநாள் வந்து பார்க்கும்படியும் அப்போது எவ்வளவு தொகை கட்ட வேண்டும் என்று சொல்வதாகவும் கூறினார். கடந்த 17.7.2018 அன்று மீண்டும் மேற்படி அலுவலகத்தில் மேற்படி தனசேகரனை சந்தித்தபோது அவர் என்னிடம் ரூபாய்.2,30,000/-ம் கட்ட வேண்டும் என்று வாய்மொழியாக சொன்னார். நான் ஒர்க்கிங் ஸ்டேட்மெண்டை தரச்சொல்லி கேட்டபோது அவர் அதை பிறகு தருவதாக சொல்லிவிட்டார். அதனால் அவர் சொன்னபடி அன்று சேலம் 4 ரோடு இந்தியன் வங்கி கிளையில் ரூபாய்.2,30,000/-க்கு DD எடுத்துக்கொண்டு மேற்படி தொகை செலுத்தப்பட்ட விபரத்தை எழுதி எனது விற்பனை பத்திரத்தை கேட்டு செயற்பொறியாளர் அவர்களுக்கு முகவரியிட்டு ஒரு விண்ணப்ப மனுவை மேற்படி அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் பிறகு, பல முறை மேற்படி அலுவலகத்திற்கு சென்று உதவியாளர் தனசேகரனிடம் எனது வீட்டின் விற்பனை பத்திரத்தை கேட்டபோது அவர் ஒர்க்கிங் சீட் அப்ரூவல் ஆகவில்லை என்றும், அப்ரூவல் வாங்கிய பிறகு பத்திரம் ரெடி செய்து தருவதாகவும் சொல்லி வந்தார். பின்னர் கடந்த 10.8.2018ம் தேதி காலை சுமார் 11 மணி அளவில் மேற்படி அலுவலகத்தில் உதவியாளர் தனசேகரனை சந்தித்து எனது வீட்டு விற்பனை பத்திரத்தை சீக்கிரம் கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு தனசேகரன் என்னிடம் உங்க வீட்டுக்கு ஒர்கிங்சீட் அப்ரூவல் வாங்கி பத்திரம் ரெடி செய்து தரவேண்டும் என்றால் தனக்கு ரூ.20,000/- தனியாக தரவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் ஏற்கனவே அரசுக்கு கட்ட வேண்டிய தொகையை கட்டிவிட்டேன். நான் கடன் வாங்கித்தான் மேற்படி தொகையை கட்டியுள்ளேன் அதனால் என்னால் அவ்வளவு தொகையை கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் தான் கேட்ட பணம் ரூ.20,000/-ஐ கொடுக்கவில்லையென்றால் விற்பனை பத்திரம் வாங்கித்தர முடியாது என்று கூறி பணத்தை ரெடி செய்து கொண்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். என்னால் அவர் சொன்னவாறு பணத்தை ரெடிசெய்ய முடியவில்லையென்பதால் மீண்டும் 24.8.2018ம் தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 11.30 மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு சென்று உதவியாளர் தனசேகரன் அவர்களை சந்தித்து எனது வீட்டு விற்பனை பத்திரத்தை பற்றி கேட்டேன். அவர் தான் சொன்ன பணத்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவ்வளவு பணம் கொண்டு வரவில்லை, வீட்டு செலவிற்காக ரூபாய்.5,000/-ம் மட்டும் வைத்திருப்பதாக கூறினேன். அவர்

அலுவலகத்தின் வேறு அறைக்கு சென்று அங்கிருந்த அலுவலர்களிடம் பேசிவிட்டு என்னிடம் வந்து உங்கள் கணக்கு வழக்கெல்லாம் முடிக்க வேண்டுமென்றால் நீங்கள் மேலும் ரூபாய்.4,000/-ம் கட்ட வேண்டும் என்று சொன்னார். அதனால் நான் அதே அலுவலகத்தில் அன்றே ரூபாய்.4,000/-ஐ செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு மதியம் உணவு வேலை என்பதால் சாப்பிட்டு முடித்துவிட்டு மீண்டும் அன்று மதியம் சுமார் 3 மணி அளவில் மேற்படி அலுவலகத்திற்கு சென்று பணத்தை செலுத்திய விபரத்தை தனசேகரன் அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர் தான் கேட்ட பணம் ரூபாய்.20,000/-த்தை கொடுத்தால் பிரச்சனையில்லாமல் ஓர்க்கிங்சீட் அப்ரூவல் வாங்கி பத்திரம் ரெடி செய்து கொடுக்க முடியும் என்று கூறி வருகிற செவ்வாய்கிழமை பணத்துடன் வரும்படி சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டிற்கு விற்பனை பத்திரத்தை பெற லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூபாய்.20,000/-ஐ லஞ்சமாக கேட்ட சேலம் வீட்டுவசதி பிரிவு உதவியாளர் திரு.தனசேகரன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 27.08.2018. (R.துரைசாமி).

Sir, Received the above computer typed complaint on 27.08.2018 at 14.00 hrs and registered a preliminary enquiry in PE.253/2018/TNHB/SL at 17.00hrs on 27.08.2018 Sd xxxx 27.08.2018. (C.R.BOOPATHIRAJAN), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

During verification, the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through the sources. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.16/AC/2018 u/s 7 of the PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.00 hrs today on 28.08.2018 and took up for investigation. Sd xxxx 28.08.2018 (C.R.BOOPATHIRAJAN), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.R.Duraisamy, S/o Rackamuthu, D.No.585, Narayanapillai Street, Peramanoor, Salem.7 is submitted to the ~~Chief Judicial Magistrate~~ / Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

28.8.18

(C.R.BOOPATHIRAJAN),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.